WWW.OLEVELAPI.COM

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

භරත නැටුම්	I, II
பரதநாட்டியம்	I, II
Bharatha Dancing	I, II

பரதநாட்டியம் II

* **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) பரவல் அடவு எத்தனை வகைப்படும்?

(ii) சங்கமருவிய காலத்துக்குரிய பதினொருவகை ஆடல்களையும் கூறும் நூல் எது?

(iii) திரியங்கங்களுள் ஜாதி பேதத்தினால் மாற்றமடையும் அங்கம் எது?

(iv) மத்சய அவதாரத்தில் பிரம்ம தேவரிடமிருந்த வேதத்தை அபகரித்துக் கொண்ட அசுரனின் பெயர் யாது?

(v) உடுக்கையின் வகைகள் எத்தனை?

(vi) வழுவூர் பாணியைத் தோற்றுவித்தவர் யார்?

(vii) மாணவர்கள் குருவிற்குப் பணிசெய்து, அவர்களுடைய வீட்டிலேயே தங்கி கலைகளைப் பெறும்முறையை எவ்வாறு அழைப்பர்?

(viii) கதகளி நடனத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய தோல் வாத்தியம் எது?

(ix) வாஸ்சல்ய பாவத்தில் காணப்படும் **இரு** உறவுமுறைகள் எவை?

(x) கேரள மாநிலத்திற்குரிய **இரு** நடனங்களும் எவை?

2. (i) பரதநாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் சாகித்தியத்துடன் ஆடப்படும் மூன்றாவது உருப்படி எது?

(ii) இவ் உருப்படியின் இலட்சணத்தை எழுதுக.

(iii) நீர் கற்ற இவ் உருப்படியின் 1 ஆவது கண்டிகையின் இராகம், தாளம் அதன் சாகித்தியத்தின் பொருள் என்பவற்றை விளக்கி எழுதுக.

3. பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை, ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.

(i) பாசம் (ii) கட்வா (iii) கர்த்தரீஸ்வஸ்திகம் (iv) பேரூண்டம்

4. பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை பின்வரும் அம்சங்களைக் கருத்திற்கொண்டு விளக்குக.

- தோற்றம்
- வாழ்க்கைப்பின்னணி
- கலைத்தொண்டு
- பந்தணை நல்லூர் பாணியின் சிறப்பு

5. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) தாண்டவம் (ii) சிஷ்ய இலட்சணம் (iii) ஏந்தல் நடனம்

6. தொழில்சார் நடனங்கள் இரண்டு பற்றிப் பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

- தொழிலின் அம்சம் (ஆடல் அசைவு)
- ஆடை ஆபரணம்
- இசைக்கருவிகள்
- நடனத்திற்குப் பொருத்தமான இரு பாடல் அடிகள்

7. நீர் பார்த்து இரசித்த நடன நிகழ்வொன்றினை பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு விமர்சிக்குக.

- ஆங்கிகா அபிநயம்
- ஆகார்யா அபிநயம்
- வாச்சிகா அபிநயம்
- சாத்வீகா அபிநயம்

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...